**செய்தி வெளியீடு எண்: 282** **நாள்: 24.05.2013**

## <u>பத்திரிக்கைச் செய்தி</u>

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மறைமலைநகர் திட்டப்பகுதி –

**மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் ஆய்வு**

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் <u>சுமார் 2000 ஏக்கர் நிலப்பரப்பில் துணை நகரமாக உருவாக்கப்பட்ட மறைமலை நகரில் தற்சமயம் 32 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட்டு வரும் தொழிற்பேட்டை மனைப்பிரிவை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களின் உத்திரவிற்கிணங்க</u> மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள் 24.05.2013 அன்று காலை ஆய்வு செய்தார்.

மறைமலை நகரில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு சொந்தமான காலியிடங்களை பார்வையிட்டு அங்கு உடனடியாக விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேலும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு சொந்தமான காலியிடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றுமாறும் மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டார். காலியிடங்களில் குடியிருப்பு மனைப் பிரிவுகளையும், தொழிற்பேட்டை மனைப் பிரிவுகளையும் உருவாக்கி, அப்பகுதியில் குடியிருப்பவர்களின் வசதிகளை கருத்தில் கொண்டு அங்கு பள்ளி வளாகம், மருத்துவமனை வசதி மற்றும் வணிக வளாகங்கள் ஏற்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு அமைச்சரின் ஆய்வின் போது வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை செயலர் திரு.தங்க கலியபெருமாள் இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்–செயலர் திரு ஆர்.வெங்கடேசன் இ.ஆ.ப., அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு.எல்.சித்திரசேனன் இ.ஆ.ப., அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திரு.காஞ்சி பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**